### கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை

# தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் கொடியேற்றி, நலத் திட்டம் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

### மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி, பிப். 28–

தமிழ்நாட்டின் முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் 73வது பிறந்த நாளான மார்ச் மாதம் 1ம் தேதி அன்று தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் 20 ஒன்றியக் கழக அமைப்புகள் மூலம் 199 ஊராட்சிகளில் உள்ள கிளைகள், 2 பகுதி கழகங்களில் உள்ள 8 மாநகராட்சி வட்டங்கள், 2 நகராட்சியில் உள்ள 45 வார்டுகள், 12 பேரூராட்சிகளில் உள்ள 186 வார்டுகள் என மாவட்டம் முழுவதும் கழக கொடியேற்றி ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மாவட்டக் கழகம் சார்பாக திருச்செந்தூரில் மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட உள்ளன. மேலும் திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்டு இயங்குகின்ற பல்வேறு முதியோர் இல்லங்கள், ஆதரவற்றோர் இல்லங்கள், பார்வையற்றோர் இல்லங்கள், மாணவர் விடுதிகள், கருணை இல்லங்கள், பெண்கள் காப்பகங்கள்,



மனநல காப்பகம், போன்ற இடங்களில் வாழ்கின்றவர்களுக்கு புத்தாடைகள் மற்றும் காலை மதிய உணவு வழங்கப்படும். மேலும் பல்வேறு இடங்களில் அன்னதானம் வழங்கப்படவுள்ளன. அதேபோல் பல்வேறு விளையாட்டு குழுக்கழுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சீறுடை வழங்கப்படும்.

நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு பொருட்கள், உடை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளன. மேலும் ஒன்றியப் பகுதிகளில் உள்ள ஆதரவற்றோர் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம், வீட்டு உபயோக பொருட்கள் வழங்க உள்ளன. மேலும் மார்ச் மாதம் 1ம் தேதி தூத்தக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்க உள்ளனர்.

பிறந்த நாள் அன்று நடைபெறுகின்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள் உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், நிர்வாகிகள். வார்டு, கிளை நிர்வாகிகள் மற்றும் கழக முன்னணியினர், பொதுமக்கள் திரலாக பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், கமலாபுரம் ஊராட்சி சுப்பிரமணியபுரம் கிராமத்தில் ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுவிநியோக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் ராமசுப்பு, இம்மானுவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஒடுகத்தூர் ஆர். நடராசன்

**பிப்ரவரி 28 (2009)**



**கழகம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து கிளை, பேரூர், ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் செயலாளராகப் பொறுப்பேற்று கழகப் பணியாற்றிய இவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் செய்து கொண்டார்.**

**மூன்று முறை பொதுக்குழு உறுப்பினராகவும், ஒரு முறை மாவட்ட அவைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**ஒடுக்கத்தூர் பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று 14 முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திருத்தணி எஸ்.விஸ்வநாதன் மறைவு!

*திருவள்ளூர், பிப். 28-*

*திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரனின் சகோதரர் விஸ்வநாதன் (எ) ரவி அவர்கள் நேற்று முன்தினம் (26.02.2026 - வியாழக் கிழமை) காலை 8 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அன்னாரின் உடல் திருத்தணி எஸ்.பி.ஐ. வங்கி அருகில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து நேற்று (27.2.2026 வெள்ளிக்கிழமை) பகல் 12.00 மணி அளவில் புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.*

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், அஞ்செட்டி ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ம.பெரியநாயகம் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.


**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 26.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப. பழனிவேல்

**பிப்ரவரி 28 (2022)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.**

**ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராகப் பொறுப்பு வகித்தவர்.**

**மூன்று முறை வடலூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றியப் பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


## நான்காம் ஆண்டு

# நினைவு அஞ்சலி

வடவூர். **ப.பழனிவேல்** அவர்கள்
நாகை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்

—— நினைவு நாள் : 28.02.2026 ——

தோற்றம் : 02.09.1940 | மறைவு : 28.02.2022

நீங்கள் காட்டிய கலைஞரின் பாதையில்
கழகத்தலைவரின் வழியில்
சின்னவர் அவர்தம் கரம்பற்றி
தொடர்ந்து பயணிப்போம் !

*என்றும் உங்கள் நினைவில்*

**வடவூர். க.ராஜேந்திரன்**
ஒன்றிய கழக செயலாளர்
தலைமை செயற்குழு உறுப்பினர்,



DHARUN Digital 9842028015

# நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க